


February 2021 Issue 2 Editor ; VM Thevarajan

## மனிதன் எழுதுவதை, பேசுவதை நிறுத்தி விடுவானா ?

மனிதன் தோன்றிய காலத்திலிருந்து தனது சிந்தனைகளை மற்றவர்களுடன் பரிமாற்றம் செய்வதற்கு பலவிதமான ஊடகங்களை உபயோகப் படுத்தி வந்தான். தொடக்கத்தில் சில சமிக்ஞைகள் மூலம் தனது எண்ணங்களை தெரியப்படுத்தி வந்தான். அதைத் தொடர்ந்து, ஆ.. ஊ... என்று பல விதமாக ஒலிகளை எழுப்புவதன் மூலம் தொடர்பு கொண்டு பேசினான். பின்னர் ஒரு சில அடையாளங்களை கீறிக் காட்டி அதை வைத்து விளங்க வைத்தான். நாளடைவில் இவைகளை எழுத்துக்களாக அடையாளப்படுத்தி அர்த்தங்களை உருவாக்கிக் கொண்டான்.

எழுத்துருக்கள் வந்த பின்னர் கற்தூண்கள், ஓலைகள், போன்றன மீது கீறியும் வர்ணத்தினால் வரைந்தும் செய்திகளைப் பரிமாறிக் கொண்டான். நாளடைவில் எழுத்துக்கள் சேர்ந்து சொற்கள், வசனங்கள் ஆகி முழு சம்பவங்களைக் குறிக்கும் அளவுக்கு மொழியை விருத்தியாக்கினான். கடதாசியைக் கண்டுபிடித்ததும் மை கொண்டு அதன் மேல எழுதப் பழகிக் கொண்டான். எழுத்துக்களைக் கோர்த்து, இயந்திரம் மூலம் கடதாசியில் படிவம் எடுத்து படிக்கத் தொடங்கினான். அதன் பின் தட்டச்சுக் கருவி வந்ததும் கடதாசியில் தட்டச்சு அடித்து வாசிக்கத் தொடங்கினான். தொடர்ந்து மின் தட்டச்சு உதவியால் விரைவாக அச்சடிக்கப் பழகிக் கொண்டான்.

கணினி புரட்சியைத் தொடர்ந்து, மனிதன் காலம் காலமாக பேசி வந்த பழக்கம் இல்லாமல் போய் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு தனது நாளாந்த அலுவல்களை செய்து கொண்டிருக்கிறான். கடதாசியில் எழுதி தொடர்பு பரிமாற்றம் செய்து கொள்வது படிப்படியாக போய் மின்னஞ்சல் வழக்கத்துக்கு வந்ததால் கடதாசி என்பது அவசியமற்றதாகி விட்டது. மனிதர்கள் ஒருவருக் கொருவர் வாயாரப் பேசிக் கொள்வது இல்லாது போய்விட்டது. ஒருவருக் கொருவர் **கடிதம்** எழுதுவதும், ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்வதும் அற்றுப் போய்விட்டது. இப்போது பேசுவதை கிரகித்து தட்டச்சு செய்யும் செயலிகளும் வந்துள்ளதால் கை விரல்களுக்கும் வேலை இல்லை. வருங்காலத்தில் மூளையில் நினைப்பதை அப்படியே மின்னஞ்சலிலோ வேறு வழியிலோ அனுப்பும் தொழில் நுட்பம் வந்து விடும். பின் பேசும் தேவை வராது.

## Amazing speech delivered by POPE FRANCIS on New Years Eve.

You can be imperfect, anxious and even angry, but don't forget that your life is the largest company in the world. Only you can prevent it from failing. . Many appreciate you, admire you and love you. Remember that being happy is not having a sky without storms, a road without accidents, a job without fatigue, a relationship without disappointments. Being happy means finding strength in forgiveness, hope in battles, security in phase of fear and love in discord. It is not only about enjoying the smile but also about reflecting on the sadness. It's not just about celebrating successes, it's about learning from failures. It's not just about being happy with applause; it's about being happy in anonymity. Being happy is not a fatality of destiny but an achievement for those who can travel within themselves. To be happy is to stop feeling a victim and to become the author of your own destiny. It is crossing desserts but being able to find an oasis in the depths of the soul. It is thanking God every morning for the miracle of life. Being happy is not being afraid of your own feelings and being able to talk about yourself. It's about the courage to hear a "no" and to regain confidence in criticism even when it is not justified. It's kissing your children, hugging your parents, living poetic moments with friends, even when they hurt us. To be happy is to let the creature that lives in each one of us live, free, happy and simple. It is having the maturity to be able to say "I was wrong". It is having the courage to ssay "I am sorry". It is having the sensitivity to say "I need you". It is having the ability to say "I love you". May your life become a garden of opportunities for happiness… may you be a lover of joy in spring and a lover of wisdom in winter. And when you make a mistake, start over. Because then only, you will be in love with your own life. You will discover that being happy is not having a perfect life. But use tears to irrigate tolerance. Use your losses to train patience. Use your mistakes with the composure of the sculptor. Use the pain to tune in to the pleasure. Use the obstacles to open the windows of intelligence. Never give up… Above all, never give up on people who love you. Never give up on happiness, because life is a miracle.

## LIFE IS A CYCLE ! !

At the age of 1 year success is... That you can walk without support.
At the age of 4 years success is... That you do not urinate in your pants.
At the age of 8 years, success is... To know the way back home.
At the age of 12 years, success is... To have friends.
At the age of 18 years, success is... To get a driver's license.
At the age of 23 years, success is... To graduate from a university.
At the age of 25 years, success is... To get an earning.
At the age of 30 years, success is... To be a family man.
At the age of 35 years, success is... To make money.
At the age of 45 years, success is... To maintain the appearance of a young man.
At the age of 50 years, success is... To provide good education for your children.
At the age of 55 years, success is... To still be able to perform your duties well.
At the age of 60 years, success is... To still be able to keep the driving license.
At the age of 65 years, success is... To live without disease.
At the age of 70 years, success is... To not be a burden on any one.
At the age of 75 years, success is... To have old friends.
At the age of 81 years, success is... To know the way back home.
At the age of 86 years, success is... That not to urinate in your pants again.
At the age of 90 years, success is... That you can walk without support again.

One of the best messages I have ever read.
Life is a cycle.!
Do you agree with us?

## பெற்றோருக்கு இப்படியும் பிள்ளைகளா !

தந்தையைக் கவனிப்பது தொடர்பாக இரு சகோதரர்கள் நடத்திய வழக்கு வரலாற்றில் இடம் பிடித்தது. சவுதி அரேபிய தலைநகரம் ரியாத் நீதிமன்றத்தில் 80 மற்றும் 70 வயதான இரண்டு சகோதரர்கள் நடத்திய வழக்கிற்கான காரணம்தான் விசித்திரமானது. 100 வயதிற்கும் மேலான தந்தையை கடந்த 40 வருடங்களுக்கு மேல் கவனித்து வருவது தனது 80 வயதான அண்ணன் என்றும், இனியுள்ள காலம் தந்தையை நான் கவனித்துக் கொள்கிறேன் என்று சொன்ன பிறகு அண்ணன் அனுமதிக்கவில்லை என்றும் எனவே நீதிமன்றம் தந்தையை கவனிக்கும் பொறுப்பை தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் 70 வயதான சகோதரன் வழக்குத் தொடர்ந்தார்...

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது என்ன வந்தாலும் தந்தையை கவனிக்கும் பொறுப்பை யாருக்கும் விட்டுத் தரமாட்டேன் என்று அண்ணனும், கடந்த 40 வருடங்களாக அண்ணன் தந்தையை கவனித்து வருவதால் இனிமேலுள்ள காலம் தந்தையை கவனிக்கும் பொறுப்பு தனக்கு வேண்டும் என்று தம்பியும் வாதம் செய்தனர். நீதிபதிக்கு ஒரு முடிவு எடுக்க முடியாமல் திணறினார். இருந்தாலும் ஒரு தீர்ப்பு சொல்லியாக வேண்டுமே... எனவே இனியுள்ள காலம் இரண்டு பேரும் தந்தையை மாறி மாறி கவனித்துக் கொள்ளலாமே என்ற கருத்தைச் சொன்னார். ஆனால் இதற்கு இரண்டு பேரும் உடன் படவில்லை. நீதிபதி தந்தையிடம் கருத்துக் கேட்டார். தந்தை எனக்கு என்னுடைய பிள்ளைகள் இருவரும் சமம். அவர்களிடம் எனக்கு வேற்றுமை காண முடியாது என்று அழுது கொண்டே சொன்னார். நீதிபதி மீண்டும் குழப்பத்தில் .... கடைசியில் நீதிபதி ஒரு முடிவுக்கு வந்து தனது தீர்ப்பைக் கூறினார். "கடந்த 40 வருடங்களாக தந்தை பெரிய மகனின் கவனிப்பில் இருந்து வந்துள்ளார். இப்போது பெரிய மகனுக்கு 80 வயதாகி முதுமை அடைந்துள்ளதாலும், மேலும் தந்தையை கவனிக்கும் பொறுப்பு பிள்ளைகள் அனைவரின் கடமை என்பதாலும் இனிவரும் காலம் தந்தையை கவனிக்கும் பொறுப்பை இளைய மகனிடம் ஒப்படைக்கிறேன்" என்றார்.

தீர்ப்பைக் கேட்டு அழுது புலம்பிய பெரிய மகன் நீதிபதியைப் பார்த்து "நீங்கள் சொர்க்க வாசலில் இருந்து என்னை அகற்றியுள்ளீர்கள்.. என்னுடைய சொர்க்க வழியை நீங்கள் அடைத்து விட்டீர்கள்..."பெரிய மகனாகிய முதியவர் அழுது புலம்பும் இந்தக் காட்சியுடன் கூடிய செய்தியை சவுதிச் செய்தித் தாள்களும் ஊடகங்களும் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன. இந்த வழக்கு தன்னுடைய வாழ்க்கையில் ஒரு வேறுபட்ட வழக்கு என்றும் இந்த வழக்கில தீர்ப்புக் கூற தான் மிகவும் வேதனை அடைந்ததாகவும் நீதிபதி கூறினார்... இதையும் செய்தித் தாள்கள் வெளியிட்டன.
தாய் தந்தையரைக் கால் பந்தைப் போல் அங்கும் இங்கும் தட்டி விளையாடுவதும், முதியோர் இல்லங்களில் அநாதைகளைப் போல் கொண்டு தள்ளுவதும் நடக்கும் இந்தக் கால கட்டத்தில் இப்படி ஒரு அபூர்வமான வழக்கு வந்ததைப் பார்க்கும் போதுதான் இந்த வழக்கு ஏன் இவ்வளவு பிரபலமடைந்தது என்று தெரியும். பெற்றோருக்கு சேவை செய்து சொர்க்கத்தை நாம் அடைய இறைவன் அருள்வானாக.

## பிள்ளைகள் வளர்ப்பு !

ஒரு தோட்டக்காரர், அவருடைய தோட்டத்திலே ஒரு பறவைக் கூட்டைக் காண்கிறார். அந்தக் கூட்டில் ஓர் முட்டையும் இருந்தது. அந்த முட்டையிலிருந்து ஒரு குட்டி பறவை வருவதைப் பார்க்கவேண்டும் என்று ஆர்வத்துடன் காத்திருந்தார். தினமும் வந்து அந்த முட்டையைப் பார்ப்பார். ஒரு நாள் அந்த முட்டையில் ஒரு வெடிப்பு இருப்பதை கவனிக்கிறார். இனி எந்த நேரமும் அந்த முட்டையை உடைத்துக் கொண்டு அந்தப் பறவைக் குஞ்சு வெளிவரலாம் என்பதை உணர்ந்து அடுத்த நாளும் அதைப் பார்க்க ஓடி வந்தார். அன்று அதிலிருந்த வெடிப்பு சற்று அகலமாக இருந்தது. முட்டையும் சற்று ஆடியது. குஞ்சு வெளியே வருவதற்கு கஷ்டப்படுகிறது போல் தெரிகிறது என்று அதற்கு உதவு முகமாக அந்த வெடிப்பை அகலமாக்கி விட்டார். அதன் பின் அந்த வெடிப்பு அப்படியே இருந்தது. நாட்கள் பலவாகியும் குஞ்சு வரவேயில்லை. எறும்புகள் உள்ளே போய் வந்தன. அப்போது தான் அறிந்து கொண்டார். அந்தக் குஞ்சு உள்ளேயே இறந்து விட்டது. ஏன் இப்படி நடந்தது என்று மிக வருத்தப்பட்டார். பறவைகள் பற்றி நன்கு தெரிந்த அவரின் நண்பர் ஒருவரிடம் ஏன் இப்டி நடந்தது என்று கேட்டார். அவர் சொன்னார் "அது சாத்தியமேயில்லையே ஏன் அப்படி ஆயிற்று?" என்றார். அப்போ இவர் சொன்னார் "அந்த முட்டையில் வெடிப்பு வந்தது பின் அது அசைந்தது குஞ்சு வரக் கஷ்டப்படுறதைப் பார்த்து வெடிப்பை சற்று அகலமாக்கினேன். இது தான் நடந்தது வேறு ஒன்றும் செய்யவில்லை" என்றார். அதற்கு அந்த நண்பர் மிக வேதனைப்பட்டு சொன்னார் "எப்பவுமே அந்த பறவைகள் முட்டைக்குள் இருந்து வருவதற்கு முன் தன்னுடைய இறகு, கால்களை எல்லாம் விரிக்கும். அதனுடைய அந்த நரம்பு அமைப்புகள் செயல்படத் தொடங்கும் போது நீ அதைத் தொட்டிருக்கக் கூடாது. அதற்கு உதவி செய்வதாக நினைத்து குஞ்சுகளின் வாழ்க்கையை முடித்து விட்டாய்".

இதே தவறை நாம் செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய குழந்தைகளையும் நாம் அவர்கள் கஷ்டப்படக் கூடாதென்று சுகமாக சௌகரியமாக வாழவேண்டும் என்று எல்லா வசதிகளையும் அவர்களுக்கு செய்து கொடுக்கிறோம். தனியாக சிந்திக்கவும், ஒரு பிரச்சினைக்கு எப்படி முகம் கொடுக்கிறது என்பது பற்றியெல்லாம் தெரியாமலே வளர்ந்து விடுகிறார்கள். மனோதத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள் "உங்கள் குழந்தைகளை உண்மையாகவே ஓர் மனோபலமுள்ள, தெளிவான வர்களாக வளர்க்க வேண்டுமென்று நினைத்தால் பிரச்சினைகளுக்கு அவர்களே முகம் கொடுக்கட்டும் என்ன செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தை எடுக்கும் சுதந்திரத்தை அவர்களுக்கு கொடுங்கள். அவனுடன் பேசாதே, இவனுடன் பேசாதே, அவனுடன் சேராதே, இவனுடன் சேராதே என்று எல்லா விஷயங்களிலும் நாங்கள் தலையிடுவதால் அவர்கள் இந்த சமுதாயத்தில் வித்தியாசமான குணமுடையவர் களையெல்லாம் சந்திக்கும் போது, அவர்களையெல்லாம் எப்படி கையாள்வது என்று தெரியாமல் போய்விடுகிறது. வேலைத் தலத்தில் என் மனேஜர் சரியில்லை, வீட்டில் மனைவி சரியில்லை, நண்பர்கள் சரியில்லை: எனக்கு இதெல்லாம் பிடிக்கவேயில்லை. இதைப் போன்ற மனநிலைக்கு அவர்கள் வந்து விடுகிறார்கள். இந்த சூழ்நிலையை எப்படி கையாள்வது என்ற விவேகமே இல்லாமல் எம் குழந்தைகளை தயார் படுத்திக் கொண்டிருக்கிறோம். இப்படி செய்தால் இப்படி நடக்கும் என்ற முன்யோசனை இல்லாமலே நடந்து கொள்கிறார்கள். கீழே விழுகிறார்களா. விழணும் அப்படி விழுந்தால் தான் அடுத்த முறை விழும்போது நிதானமாக விழுவார்கள். அனுபவத்தால் கற்றுக் கொள்வதுதான் உண்மையான அறிவு. வீதியில் பயணம் செய்வது எப்படி என்பதற்கு மட்டும் தயார் பண்ணுங்க. குழந்தைகளுக்காக ஒரு புதுப் பாதையையே அமைக்காதீர்கள்.

## நல்லதும் கெட்டதும்

ஒரு சீடன் தன் குருவிடம் கேட்டான், "நல்லதைப் படைத்த ஆண்டவன் தானே கெட்டதையும் படைத்துள்ளான். அதனால் நல்லதை மட்டும் ஏற்பது போல் கெட்டதையும் ஏற்றால் என்ன"?

குரு சிரித்துக் கொண்டே "அது அவரவர் விருப்பம்" என்றார்.

பகல் உணவு வேளை வந்தது. அந்த சீடன் தனக்கு அளிக்கப்பட்ட உணவைப் பார்த்து அதிர்ந்து விட்டான். ஒரு கிண்ணத்தில் பாலும் மறு கிண்ணத்தில் மாட்டு சாணமும் வைக்கப்பட்டு அவனிடம் உண்ணக் கொடுக்கப்பட்டது. சீடன் விழித்தான். குரு புன்முறுவலுடன் சீடனிடம் சொன்னார் "பால் சாணம் இரண்டும் பசு மாட்டிலிருந்து தானே வருகிறது. பாலை ஏற்றுக் கொள்ளும்போது சாணியை ஏற்றுக் கொள்ளக் கூடாதா?" எனக் கேட்டார். சீடன் விழித்தான்....". குரு தொடர்ந்தார் " பால் போன்று நல்லவற்றை நாம் மகிழ்வாய் வாழ அதனை அப்படியே ஏற்கலாம். சாணியை விலக்கி மண்ணில் புதைத்து உரமாக்குவது போல தீயவைகளை விலக்கி புதைத்து அவை தரும் பாடத்தை வாழ்விற்கு உரமாக்கி உயரும் வல்லமை கற்க வேண்டும் என்றார்.."

### *Punctuation is powerful !*

An English Teacher wrote on the board "A woman without her man is nothing." and asked the students to punctuate it correctly.

All the male students in the class wrote:
**"A woman, without her man, is nothing."**
All the female students wrote:
**"A woman: without her, man is nothing."**

## "சும்மா" சொல்லுவோம் தமிழின் சிறப்பை.

அது சரி சும்மா என்றால் என்ன? அடிக்கடி நாம் பாவிக்கும் சொல் தான் சும்மா. பேச்சு வழக்கு சொல்லாக இருந்தாலும் தமிழ் மொழியில் உள் வாங்கப் பட்டுள்ள ஒரு சொல் இது. சும்மா என்கிற இந்த வார்த்தைக்கு மட்டும் தமிழில் 15 அர்த்தங்கள் உண்டு. வேறு மொழிகளில் இல்லாத சிறப்பினை நாம் அடிக்கடி கூறும் இந்த சும்மா எனும் வார்த்தை எடுத்துக் காட்டும்.

1. அமைதியாக – சும்மா இருங்கள் - Quiet
2. களைப்பாறிக் கொண்டு கொஞ்ச நேரம் சும்மா இருக்கின்றேன் - leisurely
3. உண்மையில் சும்மா சொல்லக் கூடாது, அருமை – in fact
4. சும்மா (இலவசமாக) கிடைக்காது – free of cost
5. பொய் - சும்மா கதை அளக்காதே – lie
6. உபயோகமற்று – சும்மாதான் இருக்கின்றது எடுத்துக் கொள் - without use
7. சும்மா சும்மா சீண்டுகிறான் இவன் - very often
8. எப்போதும் இவன் இப்படித்தான் சும்மா சொல்லுவான் - without meaning it
9. ஒன்றுமில்லை சும்மா சொல்லுகிறேன். – just
10. காலி - இந்த பெட்டி சும்மா தான் இருக்கின்றது – empty
11. மறுபடியும் சொன்னதையே சும்மா சொல்லாதே – repeat
12. ஒன்றுமில்லாமல் (வெறுங்கையோடு) சும்மா போகக்கூடாது – bare
13. சும்மாதான் (சோம்பேறித்தனமாக) இருக்கிறோம் - lazily
14. நான் வெட்டியாக சும்மா ஏதாவது உளறுவேன். – idle
15. விளையாட்டுக்கு எல்லாமே சும்மா தான் சொன்னேன் - just for fun

நாம் அன்றாடம் பாவிக்கும் இந்த சும்மா என்கிற சொல் நாம் அதன பயன் படுத்தும் இடத்தின் படியும். தொடரும் சொற்களின்படியும் பதினைந்து விதமான அர்த்தங்களைக் கொடுக்கிறது என்றால் அது சும்மா இல்லை. சும்மாவாவது சிந்தித்தீர்களா இதனை..? உலகில் உள்ள மற்ற மொழி அனைத்தும் வாயினால் பேச, செவிக்குக் கருத்தை உணர்த்துகின்றது. ஆனால் தமிழ் மொழி இதயத்தாலே பேசி இதயத்தால் உணர வைக்கும் மொழியாகும்.

## கலி யுகம்

இன்றைய தினம் கலி யுகம் எப்படி இருக்கும் என்ற கேள்வியை எழுப்பினால், விடை என்னவாக இருக்கும்?

கொலை, களவு எங்கு பார்த்தாலும் வன்முறைகள் இப்படிப் பட்ட சூழல் தான் கலியுகம். கலியுகம் எப்படி இருக்கும் என்பதற்கு பாரதத்திலே ஒரு கதை உண்டு. இந்தக் கதை பலருக்கு தெரிந்திருக்கலாம். தெரிந்தவர்களுக்கு மீண்டும் ஒரு முறை சிந்திப்பதற்கு பயன் படுத்திக் கொள்ளுங்கள். தெரியாதவர்கள் இந்தக் கதையை தெரிந்து கொள்ளுங்கள்.

பாரதப் போர் முடிந்து தருமர் ஆட்சியிலே இருப்பார். அவருக்கு துணையாக தருமரின் சகோதரர்கள், அர்ஜுனன், பீமன், நகுலன் சகாதேவன் ஆகியோர் இருப்பார்கள். ஒரு முறை குதிரை வாங்குவதற்காக சந்தைக்கு அர்ஜுனன், நகுலன் சகாதேவன் ஆகிய மூவரும் செல்வார்கள். அப்போது ஒரு குதிரை இவர்களின் கண்ணில் படுகிறது. குதிரைக்காரனிடத்திலே இந்தக் குதிரை என்ன விலை? நீ எவ்வளவு கேட்டாலும் தருகிறோம் எங்களுக்கு இந்தக் குதிரை பிடித்துவிட்டது என்றனர். உடனே குதிரைக் காரன் சொல்லுகிறான் "இந்தக் குதிரைக்கு நான் இன்னும் விலை நிர்ணயிக்கவில்லை. என்னிடம் 3 கேள்விகள் இருக்கின்றன, அதற்கு பதிலை சொல்லிவிட்டு நீங்கள் இந்தக் குதிரையை எடுத்துக் கொள்ளலாம் என்றான். உடனே அர்ஜுனன் "கேள்வியைக் கேளுங்கள்" என்றான். முதலாவது கேள்வி, துணி தைக்கக்கூடிய ஊசியின் துவாரத்தினூடாக யானையினுடைய உடம்பு நுளைஞ்சிடுது ஆனால் வால் மட்டும் நுளையவில்லை என்ன விடை?" அர்ஜுனன் சிந்திக்கிறான். அடுத்த கேள்வி நகுலனிடத்திலே கேட்கப் படுகிறது. ஒரு பக்கம் ஒரு கிணறிருக்கு மற்றொரு பக்கம் ஆறு கிணறுகளிருக்கின்றன. ஒரு கிணற்று நீரை எடுத்து இந்த ஆறு கிணறுகளையும் நிரப்ப முடிகிறது. ஆனால் அந்த ஆறு கிணற்று நீரை எடுத்தாலும் இந்த ஒரு கிணற்றை நிரப்ப முடியாது. என்ன விடை என்று கேட்கிறான் குதிரைக்காரன். இவனும் சிந்திக்கிறான். அடுத்த கேள்வியை அறிவிற் சிறந்தவனாகிய சகாதேவனிடத்தில் கேட்கிறான். ஒரு வயல் வெளியில் முற்றிய நிலையில் கதிர்கள் இருக்கின்றன. அந்த கதிர்களை ஆடு மாடுகள் மேய்ந்து விடாமல் சுற்றிலும் வேலி அடைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் மறு நாள் வந்து பார்க்கின்ற பொழுது கதிர்கள் ஒன்றையும் காணவில்லை. மேயப்பட்டிருக்கின்றன. இதற்கு என்ன விடை என்று கேட்கின்றான். கேட்டுவிட்டு குதிரைக்காரன் சென்றுவிடுகிறான். இவர்கள் மூவரும் இதைச் சிந்தித்துக் கொண்டிருக் கிறார்கள். (தொடர்ச்சி 5ம் பக்கம்)

(4ம் பக்கத் தொடர்ச்சி)
தருமர் குதிரை வாங்கச் சென்ற மூவரையும் காணவில்லையே என்று தேடி வரச் சொல்லி பீமனை அனுப்புகிறார். பீமன் இவர்களை அழைத்துக் கொண்டு வருகிறான். தருமர் கேட்கிறார் என்ன தாமதம், காரணம் என்ன என்று. உடனே அர்ஜுனன் சொல்லுகிறான் குதிரைக் காரன் எங்களிடத்தில் மூன்று கேள்விகள் கேட்டான் அதன் விடை தெரிந்திருந்தால் எங்களுக்கு குதிரை கிடைத்திருக்கும் என்று. சரி கேள்விகளைச் கேள் என்று தருமர் கேட்கிறார்.

உடனே அர்ச்சுனன் சொல்லுகிறான் துணி தைக்ககூடிய ஊசியின் துளைக்குள்ளே யானையின் உடம்பு நுளையுது ஆனால் வால் மட்டும் நுழைய மாட்டேனென்கிறது. இதற்கு விடை என்ன என்று அர்ச்சுனன் கேட்கிறான். தருமர் சொல்கிறார் "இந்த கலியுகத்திலை கெட்டதெல்லாம் இந்தக் காதுக்குள் நுழையும். தேவையில்லாத செய்திகள் இந்தக் காதுக்குள் லேசாகப் போய்விடும். ஆனால் நல்லது இந்தக் காதுக்குள் போகச் சிரமப்படும். நல்லதைக் கேட்பதற்கு மக்கள் தயாராக இருக்க மாட்டார்கள். நல்லவர்கள் மதிக்கப்பட மாட்டார்கள். என்று தருமர் சொன்னாராம்.

இரண்டாவது கேள்வியைக் கேள் என்கிறார் தருமர். ஒரு பக்கம் ஒரு கிணறிருக்கும் மற்றொரு பக்கம் ஆறு கிணறுகளிருக்கு ஒரு கிணற்று நீரை எடுத்து ஆறு கிணறுகளையும் நிரப்ப முடியும். ஆனால் ஆறு கிணற்று நீரை எடுத்தாலும் அந்த ஒரு கிணற்றை நிரப்ப முடியாது. அதற்குரிய விடை என்ன? தருமர் சொன்னார் ஒரு கிணறு என்பது பெற்றோர்கள். ஆறு கிணறுகள் என்பது பிள்ளைகள். பெற்றோர்கள் எவ்வளவு சிரமப்பட்டாகிலும் வறுமையையும் மீறி தங்களால் இயன்ற அளவு தம் குழந்தைகளைப் பராமரிப்பார்கள், பாதுகாப்பார்கள் ஆனால் வயோதிப காலத்தில் ஆறு குழந்தைகளல்ல பத்து குழந்தைகளாக இருந்தாலும் அந்தப் பெற்றோரை பாதுகாப்பதற்கு, தாங்கிப் பிடிப்பதற்குத் தயங்குவார்கள். அப்பா நீங்க ஒரு மாசம் அக்கா வீட்டிலை இருங்க அம்மா ஒரு மாசம் தம்பி வீட்டில் இருங்க என்று பாகப்பிரிவினை நடக்கக் கூடிய கால கட்டம் இந்தக் கலி யுகம். அந்தக் காலம் வரும் என்று தருமர் சொன்னாராம்.

மூன்றாவது கேள்வியை சகாதேவன் கேட்டான். முற்றிய கதிர்கள் இருக்கக் கூடிய வயல் வெளி. சுற்றி வர வேலி அடைக்கப்பட்டிருக்கின்றது ஆனால் வந்து பார்க்கின்ற போது கதிர்களெல்லாம் மேயப் பட்டிருக்கின்றன. இதற்கு விடை என்ன ? உடனே தருமர் சொல்லுகிறார் "வேலி என்பது ஆட்சியாளர்களும் அதிகாரிகளும். கதிர்கள் என்பது மக்கள். வேலியே பயிரை மேய்ந்தது என்று ஒரு பழமொழி இருக்கிறது. கலி யுகத்தில் ஆட்சியார்களினாலும் அதிகாரிகளினாலுமே மக்கள் சுரண்டப் படுவார்கள். மக்கள் துன்பத்துக்கு உள்ளாக்கப் படுவார்கள் என்று சொல்லிவிட்டு தருமர் சொன்னாராம் வந்தவன் குதிரைக்காரன் அல்ல அவன் கலியுக புருஷன். கலி யுகம் எப்படி இருக்கும் என்பதை உங்கள் மூலமாக தெரிவிப்பதற்காக இந்தக் கேள்விகளை அவன் கேட்டிருக்கிறான்.

இந்தக் கதை ஒரு கற்பனையாகக் கூட இருக்கலாம். ஆனால் இந்தக் கால கட்டத்துக்கும் பொருந்தக் கூடிய வகையிலே இந்தக் கதை அமைந்திருக்கிறது. இன்றைக்கு எத்தனையோ பாடுகளைப் பட்டு ஒரு குழந்தையை வளர்த்திருக்கக் கூடிய தாயையும் தந்தையையும் தெருவிலே விடக்கூடிய சூழலில் பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒரு குழந்தைக்கு ஒரு வாய் சோறு ஊட்ட அந்த நிலாவைப் பாராஅந்தப் பூனையைப் பார் என்று பிள்ளையை தூக்கி வைத்துக் கொண்டு கஷ்டப்படுவதை நாம் எத்தனை முறை பார்த்திருக்கிறோம். ஆனால் இன்று அப்படி சிரமப்பட்டு வளர்த்த தாயையும் தகப்பனையும் வயோதிப காலத்தில் ஒரு வேளை உணவுக்கு தெருத் தெருவாய் அலைய விடும் பிள்ளைகள் நிறைந்திருக்கக் கூடிய காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே நாம் எம் முன்னோர்கள் காட்டிய வழியில் நடந்தால் கலியுக துன்பங்களிலிருந்து எம்மைக் காத்துக் கொள்ளலாம்.

## பார்வைகள் பலவிதம்

கடலில் விளையாடிக் கொண்டிருந்த
சிறுவனின் செருப்பு காணாமல் போய்விட்டது.
அவன் உடனே கடற்கரையில் எழுதினான்,
"இந்தக்கடல் மாபெரும் திருடன்", என்று.

கொஞ்சம் தூரத்தில் ஒருவர் அதிகமாக மீன்
பிடித்துக்கொண்டிருந்தார். அவர் நினைத்ததை விடவும்
அதிகமான மீன்கள் வலையில் சிக்கின.
அவர் அக்கடற்கரையில் எழுதினார்,
"இக்கடல் பெரும் கொடையாளியப்பா...", என்று.

அதே கடலில் ஒருவன் நீந்தி சென்று மூழ்கிவிட்டான்.
மகன் மீது அதிக பிரியமுடன் இருந்த அவன்
தாய் அக்கடற்கரையில் எழுதினாள்,
"இக்கடல் மக்களை கொன்று குவிக்கிறதே", என்று.

ஒரு வயது முதிர்ந்த மனிதர் கடலுக்குச் சென்று
முத்துக்களை வேட்டையாடிக்கொண்டு வந்தார்.
அவர் மிக்க மகிழ்ச்சியோடு அக்கடற்கரையில் எழுதினார்,
"இந்தக்கடல் ஒன்றே போதும், நான் ஆயுள்
முழுக்க மகிழ்ச்சியோடு இருக்கலாம்.!", என்று.

ஒரு மாபெரும் அலை வந்து இவர்கள் அனைவரும்
எழுதியவற்றை அழித்து விட்டு சென்றது.

SR புலேந்திரன் SRP SR புலேந்திரன் SRP SR புலேந்திரன் SRP SR புலேந்திரன்

பிறர் கூறுவதை காதில் வாங்கிக் கொள்ளாதே.
இவ்வுலகை ஒவ்வொருவரும் அவரவர் கோணத்தில்
பார்க்கிறார்கள். நீயும் தூய மனதோடு
உலகைப் பார் அழகாக இருக்கும்.

## நம்பரைச் சரியாகப் பார்த்து SMS அனுப்புங்கோ !

ஒரு பெண்மணிக்கு கொழும்பில் வேலை கிடைத்தது. பெண்மணியும் தனியாகச் சென்று வேலையில் சேர்ந்தாள். அவளுக்கு தங்குவதற்கு வசதியான வீடும் கொடுத்தார்கள். அவள் இந்த விபரத்தை கணவனுக்கு தெரிவிப்பதற்காக தன் மொபைல் மூலம் குறுஞ்செய்தி (SMS) அனுப்பினாள். குறுஞ் செய்தி தவறுதலாக கணவனுக்கு பதில் வேறொரு நபருக்குச் சென்று விட்டது. அந்த மனிதர் அப்பொழுது தான் தன் இறந்து போன மனைவிக்கு இறுதி மரியாதைகளை செய்துவிட்டு வந்திருந்தார். அவர் அந்த குறுஞ் செய்தியைப் படித்துவிட்டு மயங்கி விழுந்தார். அவரை அருகிலுள்ள வைத்திய சாலையில் சேர்த்தனர்.

அந்தக் குறுஞ் செய்தியில் கீழே உள்ளபடி எழுதி இருந்தது:

நான் இங்கு நல்ல படியாக வந்து சேர்ந்தேன் தங்குவதற்கு வசதியான இடமும் கிடைத்துள்ளது. நீங்கள் என்னைப் பற்றி கவலைப்பட வேண்டாம். முடிந்தால் இரண்டொரு நாட்களில் உங்களையும் அழைத்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு தங்கள் பாசமுள்ள,
மனைவி

## *Natural Test for guys!*

**Go up to a tree and leak**
**If your pee attracts ants, you got diabetes**
**If it dries fast, your sodium is high**
**If it smells like meat, your cholestrol is high**
**If you forgot to unzip, it's Alzheimer**
**If you missed the tree, Parkinson's**
**If you peed on your shoes, enlarged prostate**
**If you can't smell it is COVID19**




## பால் போல மனம் !

- பாலுக்கு கஷ்டம் கொடுத்தால் தயிர் ஆகிறது.
- தயிருக்கு கஷ்டம் கொடுத்தாலது வெண்ணெய் ஆகிறது.
- வெண்ணையை கொடுமை செய்தால் நெய் ஆகிறது.
- பாலை விட தயிர் உயர்ந்தது. தயிரை விட வெண்ணெய் உயர்ந்தது. வெண்ணெயை விட நெய் உயர்ந்தது.
- இதனுடைய அர்த்தம் என்னவெனில்.... அடிக்கடி கஷ்டம், சங்கடங்கள் வந்தாலும் கூட பாலானது தன் தன்மையை மாற்றிக் கொண்டாலும் மேன் மேலும் உயர்வை நோக்கியே தன் பயணத்தைத் தொடர்கின்றது.
- பால் ஒரு நாளைக்கு மட்டுமே பயன் படுத்த முடியும். பின் அது கெட்டுப் போய்விடும்.
- பாலில் ஒரு சொட்டு மோர் விடும் போது அது தயிர் ஆகிறது. அது இன்னும் இரண்டு நாட்களுக்கு இருக்கும்.
- தயிரை கடையும் போது வெண்ணெய் வருகிறது அது இன்னும் 3 நாட்களுக்கு இருக்கும்.
- வெண்ணெயைக் கொதிக்க வைத்தால் நெய் ஆகிறது. அது ஒரு போதும் கெடாது.
- ஒரே நாளில் கெட்டுப் போகும் பாலுக்குள் ஒரு போதும் கெட்டுப் போகாத நெய் ஒளிந்திருக்கிறது.
- உங்கள் மனம் கூட அளவற்ற சக்திகளால் நிரம்பியுள்ளது. அதில் கொஞ்சம் நேர்மையான எண்ணங்களைப் புகுத்துங்கள். உங்களுக்குள் நீங்களே சிந்தனை செய்யுங்கள்.
- உங்கள் வாழ்க்கையை இன்னும் நெறிப் படுத்துங்கள். பின்னர் பாருங்கள். நீங்கள் ஒரு பொழுதும் தோல்வியே காணாத பசுமையான மனிதனாக, வெற்றியாளராக மாறி இருப்பதை உணர்வீர்கள். வெற்றி நிச்சயம்.